1973 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கனவே முடிவு எடுத்த படி 50,000 ஏக்கர் நிலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்தாகிவிட்டது. இதைத் தனியாகப் பரிசிலிக்க வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : விவசாயம் செய்யத்தக்க நல்ல நிலங்கள் பல ஏக்கர் காட்டு நிலங்கள் என்ற பெயரால் உள்ளன. அப்படிப் பட்ட நிலங்களைக் காட்டிலாகாவில் இருந்து எடுத்து விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு அரசு பட்டா வழங்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : காட்டு இலாகாவுக்கும் அதிக நிலம் இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : பல ஆண்டுகளாக காட்டு நிலங்களை ஆக்கிரமித்து பயிரிட்டுக் கொண்டு வருகிற ஏழை எளியவர் களுக்குப் பட்டா செய்து தரவேண்டுமென்றால் அதை டி-நோடிபை செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அரசு உடனடியாக அதைப் பற்றிப் பரிசீலித்து அதுபோன்ற நிலங்களை டி-நோடிபை செய்து பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 50,000 ஏக்கராவில் சரிபாதி ஏற்கனவே என்க்ரோச் செய்யப்பட்ட நிலங்கள். காட்டு இலாகாவுக்கும் நிலங்கள் தேவையாக இருப்பதால் மற்ற நிலங் களைப் பற்றிப் பரிசீலித்துத்தான் முடிவு செய்ய முடியும்.

Extraction of perfumes

* 308 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether perfumes are extracted in the Government plantations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) அரசுக்குச் சொந்தமான சின்கோனா தொழிற்சாலை மூலம் வாசனைத் தைலங்கள் நடுவட்டம் என்ற இடத்தில் தயாரிக்கப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : இதை அதிகமாகத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பினால் போதுமான ஃபாரின் எக்ஸ்சேஞ்சு கிடைக்கும். வாசனைத் திரவியத்தோடு எஸன்ஸ் தயாரிப்பது பற்றியும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரிட்சார்த்தமாக நடுவட்டம் அரசாங்கத் தொழிற்சாலையில் தயாரித்து வருகிறார்கள். இப்போது ஜிரேனியம், யூகலிப்டஸ் போன்ற தைலங்கள் தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்பதற்காக ஆராய்ச்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆராய்ச்சி வெற்றி பெறுமானால் விஸ்தரிக்கலாம்.

திரு. கு. அ. பொம்மன் : நடுவட்டம் அரசுத் தொழிற்சாலையில் விரிவான முறையில் வாசனைத் தைலங்களைத் தயாரிப்பதற்கு வாய்ப்பாக இன்னும் புதிய இயந்திரங்கள் தேவை என சொல்லப்படுகின்றதே. அதை வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஒவ்வொரு ஆண்டும் சின்கோனா துறை மூலம் புது இயந்திரங்கள் வாங்க அரசை அணுகி இருக்கிறார்கள். வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதில் வெற்றியடையக் கூடிய சூழ்நிலை இருக்குமானால் அதைத் தயாரிப்பதற்கான இயந்திரங்களை வரவழைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஜிரேனியம் உற்பத்தி செய்ய எந்தெந்த இடங்கள் தகுதியான இடங்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன ? மேற்கொண்டு ஆய்வு செய்து சில இடங்களில் ஜிரேனியம் உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நீலகிரி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானலிலும் ஜிரேனியம் தயாரிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. வேறு இடங்கள் அதற்கு லாயக்குள்ளவையா என்று பரிசீலிக்க வேண்டும்.